யாழ்ப்பாண பொதுநூலகம்

# இலங்கையென்ன, எந்த நாடுதானென்ன?


விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 23 றஜப் 24 இதழ் 54
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-4-1986


## எமக்கு நியாயமே பெரிது!"

### லலித் கூற்றுக்கு பிரி: அமைச்சர் ஆப்பு!

(புதுடில்லி)

"எங்களுக்குச் சிக்கிய தீவிரவாதி, தமிழ்த் தீவிரவாதி, அந்தநாட்டுத் தீவிரவாதி இந்தநாட்டுத் தீவிரவாதி என்ற ரீதியில் எந்த வித பேதமும் கிடையாது. எமக்கு நியாயமே பெரிது. பிரிட்டனின் சட்ட திட்டங்களுக்கு முரண்பட்டு நிற்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது எமது கடமை"

பிரிட்டனிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் இலங்கை ஆயுதப்படைகளுக்கு எதிராக படைக்கலங்களையும் மற்றும் ஆயுத தளபாடங்களையும் வாங்க உதவுகிறார்கள் என இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி செய்த புகாருக்குப் பதிலளிக்கும்விதத்தில் தற்சமயம் இந்தியாவில் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. ஜியோப்ரி ஹௌவ் புதுடில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது கூறினார்.

"எந்தவொரு நாட்டின் அரசாலோ அன்றி காவல் துறையினாலோ ஏதாவது குற்றச்சாட்டின் பேரில் சம்பந்தப்பட்ட நபர்கள் திருப்பியனுப்பட வேண்டும் எனக் கோரப்படும் பட்சத்தில் அவர்களைத் திருப்பியனுப்புவது பரஸ்பர அடிப்படையிலான ஒரு மரபாகும். ஆனால் இக்கோரிக்கைகளோ அன்றி வேண்டுகோள்களோ உரிய முறையில் முன் வைக்கப்படும் பட்சத்திலேயே எம்மால் கௌரவிக்கப்படும்." என்றார். (பி)

● சந்நிதி மடங்களை நம்பியிருந்த

# 5 ஆயிரம் அநாதைகள் உணவின்றித் தவிப்பு!

(யாழ்ப்பாணம்)

**தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயமடங்களைத் தமது உணவுக்காக முற்றுமுழுதாக நம்பியிருந்த சுமார் ஐயாயிரம் அநாதைகள் நிர்க்கதிக் குள்ளாகியுள்ளனர்.**

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயச் சுற்றாடலில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும்வன் செயல்களைத் தொடர்ந்து சந்நிதி முருகனின் துணை வேண்டிக் கோயிலில் வசித்து வந்த சுமார் ஐயாயிரம் வறிய மக்கள் அவதியுறுவதாக வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுதெரிவிக்கிறது

தீராத நோயாளர்கள், விதவைகள் முதலான ஐயாயிரம் பக்கஞம் கோயிலில் இருந்து தினமும் தொண்டமனாறு ஆற்றில் தோய்ந்து முருகனை வழிபட்டு வருபவர்கள் இவர்களுக்கான உணவு இங்குள்ள பதினான்கு அடியார் மடங்களில் தினமும் வழங்கப்பட்டுவந்தது. ஆனால் அண்மையில் நடந்த இராணுவக் கெடுபிடியினால் இக்கோயில் இயங்காமையினாலும், அன்னதானமடங்களில் உணவு வழங்கப்படாமையினாலும் இவ்வறிய மக்கள் பெரும் அவதியுறுவதாக வல்வெட்டித்துறைப்பிரஜைகள் குழு தெரிவிக்கிறது.

இவ்வாலயச் சுற்றாடலில் அண்மையில் நடைபெற்ற இராணுவ துப்பாக்கிச் சூட்டிற்கு இவ்வறிய மக்களில் ஏழு பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (து

## மக்கள் வங்கி ஊழியர்கள் குழப்பநிலையில்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மக்கள் வங்கிக் கிளைகள் பூட்டப்பட்டிருப்பதன் காரணமாக அங்கு பணிபுரியும் ஊழியர்கள் தமது வங்கிகளுக்குச்சென்று கையொப்பங்களை இடவேண்டியதில்லை

[5ம் பக்கம் பார்க்க]

## சுண்டிக்குளம் கடலில் 60 பேர் கைது!

[கொழும்பு]

நேற்று முன்தினம் இந்தியாவுக்குப் படகு மூலம் சென்ற அறுபது பேர் ஆனையிறவுக்குத் தென் திசையிலுள்ள சுண்டிக்குளம் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அறுபது பேரும் கடற்படையினரால் திருகோணமலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. [ஷ]

## தாதிகள் வேலைநிறுத்தம்: நீதியான உடன்பாடு காண தொண்டமான் தீவிரம்!

[கொழும்பு]

கடந்த இருவார காலமாக நீடித்துவரும் தாதிகள் வேலைநிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் கிராமிய தொழிற்துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமான் ஈடுபட்டுள்ளார்.

தாதிமார்களுக்கு ஆதரவாக அடையாளவேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவிருந்த இருபதுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் ஏற்கனவே கலந்துரையாடிய அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடனும் தாதிமார் வேலைநிறுத்த விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளாரெனத் தெரியவருகின்றது.

தாதிமார் வேலைநிறுத்தவிவகாரப் பிரச்சனைக்குத் தீர்வு காணத் தற்போதுமேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் தோல்விகாணும் பட்சத்தில் அமைச்சர் தொண்டமான் இவ்விஷயத்தில் சமரசம்காண முழுமூச்சுடன் ஈடுபடவுள்ளாராம்.

அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் தொழிற்சங்க விவகாரங்களில் ஒரு 'பழுத்த பழம்' என்பது குறிப்பிடத்தக்கது. [ஷ]

## ஜி. ஸி. ஈ. முடிவுகள் விமானமூலம்வரும்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான ஜி ஸி. ஈ. (சாதாரண தர) பரீட்சை முடிவுகளை விமானமூலம் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

விமானமூலம் பரீட்சை முடிவுகள் இன்றுஅல்லது நாளை யாழ்ப்பாணம் அனுப்பப்படுமென நம்பப்படுகிறது. (க)

## ஹெலிகொப்டர்கள் — துண்டுப் பிரசுரங்களை வாரியிறைத்தன!

[புலோலி]

பருத்தித்துறை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை காங்கேசன்துறை, பொதுமக்களுக்கென யாழ். பாதுகாப்புப்படைத் தளபதியால் விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரமொன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் ஹெலிகாப்டர் மூலம் வடமராட்சிப் பகுதியில் போடப்பட்டன. (5ம் பக்கம் பார்க்க

## கொள்ளையின் எதிரொலி: யாழ். நகரில் நேற்று மறியல் கடையடைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் விக்ரர் அன் சன்ஸ் நிறுவனத்தில் நடந்த ஒரு லட்சம் ரூபா கொள்ளையை ஆட்சேபித்து நேற்று யாழ். நகரில் கடையடைப்புப், வீதி மறிப்புப் போராட்டமும் நடைபெற்றன.

யாழ் விக்ரர் அன் சன்ஸ் நிறுவனம் அமைந்துள்ள ஸ்ரான்லி வீதியில் சகல வர்த்தக நிலையங்களும் கடையடைப்புச் செய்தன

கஸ்தூரியார் வீதி ஸ்ரான்லி சந்தியிலிருந்து வெலிங்டன் தியேட்டர்சந்திவரை சுலோக அட்டைகளுடன் வீதி மறிப்புப்போராட்டம் நண்பகல் வரை நடைபெற்றது.

பெரிய கடைப்பகுதியில் சில கடைகள் திறந்திருந்தன சில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன. (க)

## மட்டக்களப்பில் — இளம் அரச ஊழியர்கள் படையினரால் துன்பம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு அரசகாரியாலயங்களில் கடமையாற்றும் இளம்வயது உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் பாதுகாப்புப்படையினரின் துன்புறுத்தல்களுக்குள்ளாகிவருகின்றனர்.

பிற்பகல் காரியாலயம் முடிந்து வீடுதிரும்பும் இவ்வுத்தியோகத்தர்கள் பாதுகாப்புப் படையினரால் வழிமறிக்கப்பட்டுமுகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு இரவு வெகு நேரம்வரை வைக்கப்படுவதுடன் தாக்கவும்படுகின்றனர், முகமூடி முன்னிலையில் நிறுத்தப்படும் இவர்கள் முகமூடிகள் தலைஆட்டாவிட்டால் சனநடமாட்டமில்லாத நேரத்தில் விடப்படுகின்றனர்.

நேற்று கச்சேரி சிற்றூழியர் ஒருவர் காரியாலயத்தை மூடிவிட்டுப் பிற்பகல் 5 மணிக்கு வீடுதிரும்பும்சமயம் படையினரின் வன்செயலுக்காளானார். அவர் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இதனால் மட்டக்களப்பில் அரச ஊழியரிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இதுபற்றி மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவினர் ஆட்சேபம் தெரிவித்திருந்தும் இத்தொல்லை நீடிக்கிறது. (மா)

## பலாலியிலிருந்து — இடம்பெயர்ந்தோர் விபரம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

"பலாலி விமானத்தளக் காணி விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ்காணி சுவீகரிப்பு எல்லைக்குள் இருக்கும்வதிவிடங்களை விட்டு வெளியேறியவர்களின் விபரங்கள் தற்போது தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரினால் சேகரிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மேற்படி விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

நிவாரண வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காகக் காணிகளை விட்டு வெளியேறியவர்கள்காணியின்பரப்பு, கட்டிடம் கிணறு, பயிர் வகைகள் வேறு சொத்துக்கள் என்பனபோன்ற விபரங்களுடன் விண்ணப்பத்துடன் ஒவ்வொரு மசாத்தினதும் பெறுமதியைத் தனித்தனியாக காட்டவேண்டும்.

மேற்படி விபரங்களுடன் அடங்கிய நட்டஈட்டுக்கோரிக்கையைப் பாதிக்கப்பட்டவர்கள் இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபருக்குத்தெரிவிக்கவேண்டும் என்றும் மேலதிக விபரங்களுக்குக் குறித்த

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு மாசிவன் சந்திக்கருகில் ஒன்றரைப்பரப்புக் காணியும், புதிய வீடும், விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: த. பவளகேசரி, பவளம் ஸ்ரோர்ஸ், நீர்வேலி வடக்கு அல்லது மதராஸ் யுவலறி மாட், 264, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [C 1572]

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம், சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (C-1366)

ஐந்துமாதச் சினை கொண்ட கலப்பினப் பசு விற்பனைக்குண்டு. விலை ரூபா 2000/- மா க. பிள்ளையார் புன்னாலை, தெல்லிப்பழை. [C 1533]

காங்கேசன்துறை யாழ். வீதியிலிருந்து செல்லும் மாம்பிராய் வீதியில் ஐந்து பரப்புக்கு மேல் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு செ. கெங்காதரன், மோகன் ஸ்ரோர்ஸ், யாழ். வீதி, காங்கேசன்துறை. [C 1601]

பாவனையிலுள்ள National T. V. 20'' கலர் விற்பனைக்குண்டு. தொடபு 222. [432] ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 1589]

தொடர்ந்து சொந்தப் பாவனையிலுள்ள ஒஸ்ரின் சோமசெற் EY தொடர் நல்ல நிலைமையில் உடன் விற்பனைக்குண்டு. 50 விதானையார் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (C 1577]

வெளிநாடு செல்லும் என்ஜினியர் குடும்பத்தின் வீட்டுத் தளபாடங்கள் தேக்கு அல்மாரி, கண்ணாடி மேசைகள், Fomica சாப்பாட்டுமேசை, Show case, Cooker, மின் விசிறிகள், குளிர்சாதனப் பெட்டி, சிங்கர் தையல் மெசின், புத்தக ராக்கை, ஹோல் செற்றி, Cane Chairs, Spring கட்டில் மெத்தைகள், சில்வர் பொருட்கள், Pyrex கிளாஸ் வகைகள், Tea Sets, Beer glasses, Iron, Garden Umbrella, Tools, Engineers Drawing Instrument, சூட்கேஸ் உடன் விற்பனைக்குண்டு பத்மநாதன், ஆடியபாதம் றோட், (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கிடையில்). (C 1596)

## சேவை

மட்டுவிலில் சகாய விற்பனை: 7-4-86 மட்டுவில் அம்மன் கோவில் கடைசித்திங்கள் பொங்கல் திருவிழாவில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாசனத்தில் ரூபா 15/-ற்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக், 1986-ம் ஆண்டு காந்திக் கலண்டர், அறிவு நூல்கள், வீட்டுத் தோட்டத்துக்குரிய கீரை விதைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது வாகனத்தில் கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (A 546)

## பயிற்சி

Computer Programming ரெலிவிசன், வீடியோ டெக்நிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங், வயின்டிங், வகுப்புக்கள் கூடிய நேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன ஆரம்பம்: 06-04-86 விபரங்களிற்கு: Jaffna Technical Institute, 52/11, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமையில்) யாழ்ப்பாணம். C-1505

## கல்வி

சமூகக்கல்வி நூல் (ஆண்டு 9, 10, 11 புதியபாடத்திட்டம்) வெளிவந்துவிட்டது. ஆசிரியர் க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 1498)

S. L. A. S. பரீட்சைக்குரிய பொதுவுளச் சார்பு, பொது அறிவு. கிரகித்தல் நூல்கள் வெளிவந்துவிட்டன. (ஆசிரியர் க. குணராசா) ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C 1499)

## வகுப்புகள்

ரேடியோ, ரீ. வி, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து- புதிய வகுப்புக்கள் 04-04-86, 05-04-86இல் ஆரம்பமாகின்றன. முதலில் சேருபவரிடம் குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineeri g, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-1508

தொழில் புரிபவர்களின் வேண்டுதற்கிணங்க தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் 5-4-86 முதல் [சனி' ஞாயிறு நாட்களில்] பிரத்தியேகவகுப்பு நடைபெறும். தொடர்பு கொள்ளவும்: சி. குணாளன், றெலிகோணர், சாவகச்சேரி. [C1535]

## தேவை

சிங்கப்பூரில் முஸ்லிம் குடும்பத்தில் பணிப்பெண்ணாகப் பணிபுரிய முஸ்லிம் பெண்ணும், மற்றும் தமிழ்பெண்ணும் தேவை. தொடர்பு: த துரைசிங்கம், 376 B, நாவலர்வீதி, அரியாலை, கனகரத்தினம் மகாவித்தியாலயம் முன்பாக, தொலைபேசி 22602. [C-1598]

வட்டக்கம்பிக் கதிரைகள் பிளாஸ்டிக்கினால் பின்னக் கூடியவர்கள் உடன் தேவை. தொடர்பு: எஸ். ஆர். ஞானசுந்தரம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. (C 1600)

பலசரக்குக் கடை ஒன்றிற்கு ஆண் விற்பனையாளர் தேவை. 35—45வயதுக்கு இடைப்பட்டவராகவும் விற்பனை அனுபவமுள்ளவராகவும் இருக்கவேண்டும். 15—20 வயதுக்கு இடைப்பட்டவரும் விற்பனையாளராக தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (C 1602)

## கல்வி

மாணவர்களே! ஆங்கில அறிவு வளர்ச்சிக்கு பெருந்தொகையான வினைச் சொற்கள் சகல பிரிவுகளுடனும் தமிழ்க் கருத்துடன்- Verbs and Meanings. விலை 14/- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C 1660]

## மின் தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-04-06ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகள் காரணமாக, காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள்ளும், திருநெல்வேலி, கோண்டாவில், கோப்பாய், கொக்குவில் ஆகிய இடங்களுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இம்மின் தடையால் பாதிப்படையும் சகல மின்நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

[A 545]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
திருமதி ஜெகநாரு பத்மினி பிளாக்
தோற்றம்: 09-09-1908
அமரத்துவம்: 05-04-1984

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு ஒருபோதும் மறையாது.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஜெயராமன் (மகன்),
றோகினி [மருமகள்],
தமயந்தி, ருக்ஷான்.
(பேரப்பிள்ளைகள்)

பிளாக் வீதி,
சங்கானை.
05-04-86. [C1501]

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



செல்வன் நக்கீரன் நவரத்தினம்
தோற்றம்: 1958-01-15
மறைவு: 1985-04-11

அன்னாரின் முதலாவது ஆண்டு நினைவு நாள் நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 24-ந் திகதி [6-4-86] ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் எங்கள் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் சுற்றத்தோடு கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
சு. நவரத்தினம்
குடும்பத்தினர்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். C 1603

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
அன்னம்மா (தேவி) கணேசன்
மண்ணுலகு: 11-6-43
விண்ணுலகு: 7-3-86

எவரிடத்தும் சிரித்த முகம்
சாந்தமான பேச்சு
ஈகை அறம் யாவுமே
கொண்டொழுகும் பாங்கு
நவநவமாய்இல்லத்தில்
வாய்த்த பெரும் செல்வம்
நாமினிமேல்
யாரிடத்துக்
காண்போமோ கூறு

நாளை 6-4-86ல் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப்பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன்— பிள்ளைகள்.

''குணஸ்தான்'',
சங்கானை. (C1599)

## 21-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
சதாசிவம் சுந்தரம்
தோற்றம்: 12-04-1896
மறைவு: 16-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, வழிகாட்டியாக விளங்கிய தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

17-03-86 இல் நடைபெற்ற அன்னாரது மரணச்சடங்குகளில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்தியனுப்பியவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
திரு. சு, தியாகராசா
குடும்பம்,
திரு. சி. கதிரித்தம்பி
குடும்பம்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய். [C1597]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றில்

தும்பளை, பருத்தித்துறை காலஞ்சென்ற இராமநாதன் ஐங்கரநாதன் என்பவரது மரணசாதனம எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கும் விடயமாக.

- மரணமெய்தியவர்.

வழ. இல:
தத்துவம்/3953

இராமநாதன் ஐங்கரநாநாதன் கைம்பெண் புவனேஸ்வரி, மே/பா. எஸ். செல்வரட்ணம், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

- மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 16ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றது.

1986ம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்;
அ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
[C 1526]

# அமெரிக்காமீது நிக்கரகுவா போர் தொடுக்கும் சூழ்நிலை!

## டானியல் ஓர்டேகா எச்சரிக்கை!!

மனகுவா, ஏப். 4

''நிக்கரகுவா 'சன்டி நிஸ்ர' ஆட்சியில் அமெரிக்கா மேற்கொண்டுவரும் குறுக்கீடுகள், அமெரிக்கா மீது நிக்கரகுவாவை போர் தொடுக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளது'' என்று நிக்கரகுவா அதிபர் திரு டானியல் ஓர்டேகா தெரிவித்துள்ளார்.

திரு. ஓர்டேகா ஹொண்டுயுரஸ் வானொலிக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

நிக்கரகுவா ஆட்சியாளருக்கு எதிராக 'கொன்ற்ரா' என்ற அந்நாட்டின் கிளர்ச்சியாளர்கள் அமைப்பு இயங்கிவருகின்றது. இந்த இயக்கத்துக்கு அமெரிக்கா தீவிர ஆதரவளிப்பதன் மூலமே நிக்கரகுவா அரசின் ஆத்திரத்தையும், பகைமையையும் அமெரிக்கா சம்பாதித்துள்ளது என்று திரு ஓர்டேகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உலகச் செய்திகள்

நிக்கரகுவாவின் அயல்நாடு ஹொன்டியுரஸாகும் இங்கேயே 'கொன்ற்ரா' கிளர்ச்சிப் படைகளின் தளங்கள் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தளங்களை முறியடிக்க நிக்கரகுவா அதன் படைகளை இருவாரங்களுக்கு முன்னர் ஹொன்டியுரசுக்குள் அனுப்பியிருந்தது.

ஆனால் ஹொன்டியுரஸ் படைகள் அமெரிக்கா வழங்கிய இராணுவ உதவிகளுடன் நிக்கரகுவாப்படைகளை எதிர்கொண்டன.

திரு ஓர்டேகா இந்தமோதல் பற்றித்தெரிவித்ததாவது: ''எல்லை குறிப்பிடப்படாதிருந்த வழியாகவே நிக்கரகுவாப்படைகள் ஹொன்டுயுரஸ் சென்றன.

ஆயினும் இந்த நாட்டுக்குள் 'கொன்ற்ரா' படைகள் இருந்தாலும் ஹொன்டுயுரஸை நிக்கரகுவா ஒருபோதும் தாக்க மாட்டாது. என்றார்,

நிக்கரகுவாவை அயல்நாடுகளுடன் பகைக்கச் செய்வதுடன், நிக்கரகுவாவின் ஸ்திரத்தன்மைக்கு ஊறுவிளைவிக்கும் அமெரிக்கா மீது நிக்கரகுவா போர் தொடுக்கவே செய்யும்'' என்று ஓர்டேகா மேலும்தெரிவித்தார். (கி)

---

பிரஜைகள்குழுக்களின் இணைப்புக்குழு

# தொண்டமனாறு முகாமை அகற்றுமாறு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சூழலில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை ஆராய்ந்த பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு, அச்சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் ஆலயத்துக்கண்மையிலுள்ள இராணுவ முகாமை அப்புறப்படுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளது.

செல்வச் சந்நிதி கோவில் சூழலில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுக் கொலைச் சம்பவங்களால், கோவிலில் பூஜை ஆராதனைகள் பல நாட்களாகத் தடைப்பட்டிருப்பது தெரிந்ததே.

இவ்விஷயம் சம்பந்தமாக யாழ் மாவட்டத்திலுள்ள சகல இந்து மதத்தலைவர்களுக்கும், நிறுவனங்களின் தலைவர்களுக்கும் தெரியப்படுத்துவதுடன் அவர்கள் கூட்டாக எடுக்கும் நடவடிக்கைக்கும் இணைப்புக்குழு ஆதரவு வழங்குவதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்து ஆலய பாதுகாப்புக் குழுவின் போஷகர் நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளை இணைப்புக்குழு சந்தித்து இப்பிரசனைகள் சம்பந்தமாக ஆலோசனை நடத்தியது.

மேலும் இது சம்பந்தமாகச் சகலரையும் உள்ளடக்கிய ஒரு பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டவும் இணைப்புக் குழு தீர்மானித்துள்ளது. (மா)

---

## பிரதம ஜெயிலரிடம் கொள்ளையர் கைவரிசை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம ஜெயிலர் எஸ். பி. மூர்த்தியிடமிருந்து துப்பாக்கி முனையில் 1,130 ரூபா கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இவ்வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இவர் வங்கியிலிருந்து பணத்தை மீட்டுக்கொண்டு தமது அலுவலகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபொழுது, இனந் தெரியாத 5 நபர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு பணத்தை அபகரித்துச் சென்றுவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. [மா]

---

## விமானக் குண்டு வெடிப்பு: சந்தேகநபர் ஒரு பெண்மணி?

ஏதன்ஸ் ஏப் 4

நேற்றுமுன்தினம் ஏதென்ஸ் விமான நிலையத்தில் இடம்பெற்ற அமெரிக்க விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சந்தேகநபர் ஒரு பெண் பயங்கரவாதி என்று அறியப்பட்டுள்ளது.

இவர் மான் ஸோ என்ற லெபனன் பிரஜை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெய்ரோ விமான நிலையத்திலிருந்து அந்த அமெரிக்க விமானம் புறப்பட்டபோது இப்பெண்மணி ஏறியுள்ளார் என்றும், இவர் அமர்திருந்த இருக்கைக்கு முன்னுலிந்த இருக்கைப் பகுதியிலேயே குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இப்பெண்ணைத் தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் கிரேக்க, அமெரிக்க, எகிப்து புலனாய்வுப் பிரிவினர் கூட்டாக இயங்கி வருகின்றனர்.

இதேவேளை ஆகாயத்தில் அவ்விமானக்குண்டு வெடிப்பு நிகழ்ந்த போது அவ்விமானத்தின் ஜன்னல் ஓரமாக ஏற்பட்ட பெரிய துவார மூடாகவே அதன் அருகிலுள்ள பயணிகள் காற்றின் வேகத்தினால் வெளியே இழுத்து வீசப்பட்டனர். இவ்வாறு வெளியே இழுத்தெறியப்பட்ட நான்கு பயணிகளின் சடலங்களும் வெளியொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. (கி)

---

# எகிப்தில் ஆயிரம் பொலிஸார் மீது வழக்குத் தாக்கல்!

செய்ரோ ஏப்.4

எகிப்தில் கடந்த பெப்ரவரியில் இடம் பெற்ற கலவரங்கள் தொடர்பாக ஆயிரம் பொலிஸ்காரர்கள் மீது வழக்குத் தொடரப்பட வுள்ளது

உலக பொலிஸ்சேவை வரலாற்றில் இவ்வளவு தொகையான பொலிஸார் மீது ஒரே நேரத்தில் வழக்குத் தொடரப்படுவது இதுவே முதல்தடவையாகும் எனத் தெரியவந்துள்ளது.

எகிப்தில் பொருள் விலையேற்றம் மற்றும் வாழ்க்கைத்தர வீழ்ச்சி என்பனவற்றைக் கண்டித்து கடந்த பெப்ரவரியில் கெய்ரோவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கலவரங்கள் இடம் பெற்றன.

இவற்றில் சுமார் மூன்று ஹோட்டல்கள் எரிக்கப்பட்டதுடன் பலகடைகளும் வியாபார ஸ்தாபனங்களும் நாசமாக்கப்பட்டன.

இக்கலவரங்களில் ஈடுபட்டோர் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல்களில் 07 பேர் கொல்லப்பட்டனர். 700 பேர் காயமடைந்தனர். இக்கலவரங்களை சில பொலிஸ் பிரிவினரே ஒழுங்கு செய்திருந்தனர் என தெரியவந்துள்ளது. எனவே கொள்ளை, தீவைப்பு, கொலை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே ஆயிரம் பொலிஸ்காரர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு மரண தண்டனை உட்பட கடும் தண்டனைகள் விதிக்கப்படலாம் என்று எகிப்தின் பிரதம வழக்குத் தொடுநர் அறிவித்துள்ளார். [கி]

---

தமிழகத்தில்

## வறிய பத்திரிகையாளருக்கு இம்மாதம் முதல் ஓய்வூதியம்!

சென்னை, ஏப். 4

தமிழ் நாட்டில் தொழில் பார்க்கும் வறிய பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

இப்பத்திரிகையாளர்கள் 50 ஆண்டுகள் ஒருதினசரி அல்லது வார, மாத நத பத்திரிகைகளில் முழுநேர ஆசிரியர்கள், அல்லது உதவி ஆசிரியர்கள் நிருபர்களாகப்பணியாற்றியிருத்தல்வேண்டும்மென்று தெரிவிக்கப்பட்டுள்ளது,

இத்தகைமை உடைய பத்திரிகையாளர்களுககு அவர்கள் 50 வயதுக்கு மேற்பட்டவறிய நிலையில் வருடமொன்றுக்கு 5 ஆயிரத்துக்கும் குறைவான வருமானம் உடையவர்கள் என்று அறியும்பட்சத்திலேயே ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஓய்வூதியத் தொகை மாதமொன்றுக்கு ரூபா 250 ஆக அமையும என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

---

## பொலிஸ் பிடியிலிருந்து சிக்கிய தீவிரவாதி தப்பியோட்டம்!

புதுடில்லி, ஏப். 4

பொலிஸ் காவலிலிருந்து சிக்கிய தீவிரவாத சந்தேகநபர் ஒருவர் தப்பிஓடியுள்ளார்.

ஹர்ஜேந்திரசிங் ஜிந்தா என்ற இத்தீவிரவாதிபுதுடில்லியிலிருந்து அகமதாபாத்துக்கு வங்கிகொள்ளைவழக்கொன்று தொடர்பாகக் கொண்டுவரப்பட்டிருந்தார்.

இவர் அகமதாபாத் நீதிமன்றிற்கு அழைத்துவரப்படும் வழியிலேயே பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜிந்தா என்ற இத்தீவிரவாதி பொலிஸாரினால் மிகவும்வேண்டப்பட்ட ஒருவராவார். இவர் கடந்த தைமாதம் புதுடில்லியில் கைதானர்

பொலிஸ் பிடியிலிருந்து தப்பிய இவரைத்தேடி நாடு முழுவதும் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவரால் சீக்கிய குழப்பங்களுக்கு தூண்டுதல்கள் ஏற்படலாமெனவும் அஞ்சப்படுகிறது. (கி)

---

## மாணவன் கைது!

### பாடசாலை வெறிச்சோடியது

[பூநகரி]

பூநகரி மகாவித்தியாலய க. பொ. த. [உ / த] மாணவன் பரமு கிருஷ்ணகுமார் (வயது 20) 31-3-86ல் மேற்படி மகாவித்தியாலயத்தில் வைத்துப் பூநகரி 4ம் கட்டை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரத்துக்குமேற்பட்ட மாணவர்கள் பயிலும் பாடசாலை வெறிச்சோடிக்கிடக்கிறது.

இப்போது முதலாம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் பாடசாலைக்கு மாணவர்கள் சகலரும் போகாமல் இருக்கிறார்கள் இவ்விடயம் பூநகரி பிரஜைகள் குழுவினதும், கிளிநொச்சிக் கல்வி அதிகாரியினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

---

## தண்ணீர்கேட்டு உட்புகுந்து நகை, பணம் கொள்ளை!

(புலோலி)

இரவு வேளையில் வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத ஆயுத கோஷ்டியினர் வீட்டுரிமையாளர்களைப் பயமுறுத்தி ரொக்கப்பணம் தங்க நகைகள் உட்பட சுமார் 1,75,000 ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கே. விஸ்ணுஆனந்தமூர்த்தி என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற இக்கொள்ளை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரவு 9 மணியளவில் வீட்டு முன்றலில் வான் ஒன்று வந்து நின்றபோது, வீட்டுரிமையாளர் முன்புறம் செல்ல ஆயுதங்களுடனான இரு இனந்தெரியாத இளைஞர்கள் வான் பழுதடைந்து விட்டதாகவும் மோட்டார் சைக்கிளைத்தந்துதவுமாறும் கேட்டபோது வீட்டுரிமையாளர் கேற்றைத் திறந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொடுக்க மேலும் நான்கு ஆயுதமேந்திய இளைஞர்கள் உட்புகுந்து தண்ணீர் கேட்டு வீட்டில் உள்ள சகலரையும் பயமுறுத்தி அறை ஒன்றுக்குள் கட்டிலில் முகம் குப்புறப்படுக்கவைத்து பெட்டிகளைத் திறந்து இக்கொள்ளையை நடத்தினராம்.

சத்தமிட்டால் சுட்டுவிடுவதாகவும் பயமுறுத்தியுள்ளனர் இரும்புப்பெட்டியிலிருந்த 36,000 ரூபா பணம் தாலிக்கொடி உட்பட தங்கநகைகள் ரீ-வி. றேடியோ, மணிக்கூடு, மின்சாரக்காற்றூடி, சில்வர் பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

---

## அகதிகள் பராமரிப்புக் குழு

[அராலி]

மயிலிட்டியில் இருந்து அகதிகளாக அராலி இந்துக்கல் லூரியில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளைப் பராமரிப்பதற்கு என அகதிகள் பராமரிப்புக் குழு தெரிவு இடம்பெற்றது.

தலைவர்:-டாக்டர் செ பரமசிவம்பிள்ளை, உப-தலைவர்:- திரு லோக செந்தில்நாயகம், செயலாளர்:- திரு நா நடனசண்முகதாசன், உப-செயலாளர்:- திரு தி விக்கினஜெயம், பொருளாளர்:- திரு சி முருகேசன், நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அராலி இந்துவிலுள்ள அகதிகளுக்கு உதவிபுரிய விரும்புகிறவர்கள் மேற்படி குழுவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## மணி வாக்கு

எம்மால் ஒரு வாழைப்பழத்தைத் தானும் உருவாக்க முடியுமா? மரத்தை வளர்க்கத் தேங்காய் தன்னை அர்ப்பணஞ்செய்கிறது.

—சிவயோக சுவாமிகள்.

# நமதுநோக்கு

## மருதடியானுக்கு அர்ப்பணம்

தமிழர் புதுவருட சோபனம் என்றால் மானிப்பாய் மருதடி விநாயகரின் தேர்த் திருவிழா கண்முன் நிற்கும், பாரதியாரின் விநாயக வணக்கம் குறிப்பிடும் பாட்டு இந்தக் காலத்தில் வாழும் இந்நாட்டுத் தமிழருக்கென்றே பாடப்பட்டது போல் தோன்றுகிறது.

பக்தியுடையார்
காரியத்திற் பதறார்,
மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும்
தன்மைபோல்
மெல்லச் செய்து
பயனடைவார்.

'மானிப்பாய்' என்றதும் மருதடி விநாயகர் ஆலயமும், அதற்கு எதிரேயுள்ள மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியுமே பலருக்கு நினைவுக்கு வரும்.

மேனாட்டு மருத்துவத்தைத் தமிழில் தந்த மிஷனரி டாக்டர் கிறீன் விநாயகரின் அருளால் ஒரு ஆஸ்பத்திரியை நிறுவியதோடு மேனாட்டு வைத்தியரில்லாத குறையையும் நிவர்த்திசெய்தார். இந்த நூற்றாண்டில் முதல் நாற்பது வருடங்களில் இந்த மருத்துவ நிலையத்தின் பெயர் நாடெங்கும் பரவியிருந்ததற்கு அமெரிக்க மிஷனரி தமிழ் (Only) பேசும் ஜேம்சன் ஐயர் முக்கிய காரணமாகவிருந்தார்

நோயாளிகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதும் அதேசமயம் மருதடியானின் அருள்பெறுவதும் ஒருமித்து நடப்பதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர்ப் பிச்சை பெற்றனர்.

இவ்வருட முடிவில் மானிப்பாய்க்கு நிகழ்ந்த பேரிழப்பு வரலாற்றில் குறிப்பிடத்தக்கது சேர் பொன்னம்பலம் சகோதரர்கள், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி போன்ற பெரியோர்களின் வம்சாவளி மானிப்பாய்.

இவர்கள் தமிழரின் பழமையையும் பெருமையையும் உலகறியச் செய்த உத்தமத் தலைவர்கள்.

கொழும்பில் வர்த்தகம் வங்கி போன்ற துறைகளின் முன்னோடிகள் மானிப்பாய் வாசிகள் கொழும்பு (7) வாசிகளாகப் பலர் வாழ்ந்த போதும் தங்கள் பிறப்பிடத்தை மறக்காது வளம்பெறச் செய்தவர்கள்.

தமிழ் வைத்தியத்துறையில் பிரபலம் பெற்ற குடும்பத்தின் தோன்றலே பேராசிரியர் அ. சின்னத்தம்பி. அவருடையமருகரே மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் க. முத்துவேற்பிள்ளை. மானிப்பாய் ஈன்ற பெருவள்ளலே முதலியார் மகேசன். இம் மூவரும் ஒரு வாரத்தில் ஒருவர் பின் ஒருவராய் இறைவனடி சேர்ந்தார்கள். ஆனால் பிறந்த பொன்னாட்டுக்கு மட்டுமல்ல அகில உலகிலும் தமிழே அனாதியான மொழியென்றும், திராவிட நாகரிகம் மிகப் பழமை வாய்ந்ததென்றும் எடுத்துரைத்த சுவாமி ஞானப்பிரகாசரும், கல்வித்துறையில் துறைபோகக் கற்றுக் கற்பித்த பேரறிஞர் ஹன்டி பேரின்பநாயகம் போன்ற பலதரப்பட்ட வித்தகர்கள் தோன்றிய இடம் மானிப்பாய்.

இலங்கையில் எப்பகுதியிலும் வாழும் தமிழ் மக்கள் தங்கள் உயிர்ப்பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டிருக்கிறதென்று கலங்கும் வேளையில் வாரமுடிவில் உதயமாகும் புதுவருடத்திலாவது மருதடியான் கண்முழிக்க வேண்டுமென்று மன்றாடுகின்றனர்.

கல்வி, செல்வம், தொழில், சுகவாழ்வு, வர்த்தகம், போக்குவரத்து போன்ற மனிதரின் பண்பட்ட வாழ்க்கைக்குரிய துறைகள்யாவும் வறண்டுவருகின்றன. இந்நிலையில் வாழும் இந்நாட்டின் தமிழ்மக்களின் உயிருக்கே உலைவைக்கும் தீங்குகள் நாளுக்குநாள் பெருகி வருகின்றன.

இந்த அழகான, அமைதியாகவிருந்த இச்சிறு நாடு இன்று போர்க்களமாகவும், தமிழ் மக்களைப் பகைவராக கணிக்கும் ஆட்சியில் சிக்கியிருப்பதும் பிரத்தியட்சம்.

அக்காலத்தில் ஒருமானிப்பாய்வாசி, கொழும்பில் பெற்றிருந்த செல்வாக்கைக் கொண்டு அவருடைய நாஅசைய நாடசையும். அத்தகைய வீரச்செயல்களை நினைவூட்டும் வரலாறு நூல்களில் மட்டுமல்ல தலைநகரில் காணப்படும் உருவச் சிலைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவர்களுக்கெல்லாம் தேவனை கணபதியை, இந்த இருள்நிறைந்த வருடமுடிவில் மீண்டும் மன்றாடுகின்றோம். யாழ்ப்பாணம் என்பது ஒரு நாடு அதன் விசாலம் குறுகியதானாலும் விஷயம் விசாலமானது.

மானிப்பாய்க்குரிய பிரபலத்தை உடைய பல சிறுஊர்கள் இந்த நாட்டில் உள அவையாவும் நாட்டுக்கு செய்தபணியைக் கூறுவதானால் அது இன்னொரு மகாபாரதமாகும்.

இன்று இந்த மக்களையும் அவர்களின் வசிப்பிடங்களையும் பீடித்திருக்கும் பெருநோய் குணமடைய, எங்கும் வியாபித்திருக்கும், முன்னவனாகிய நீ கண் விழிக்க வேண்டும்.

உலகனைத்திலும் தமிழன் என்றும், இலங்கைவாழ் பெருமகன் என்றும் புகழ் பெற்ற மக்கள், இன்று அகதிகளாக நாட்டிலும், வெளியூர்களிலும் அவஸ்தைப்படும் துன்ப அத்தியாயத்துக்கு முடிவுகட்ட முன்வரவேண்டும்.

இந்தப்பிரார்த்தனைநிறைவேறநாம் தகுதியுடையவராவது எமது பெரும் பொறுப்பு.

### ரூபா 70 ஆயிரம் செலவில்

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து விக்கிரகங்கள்!

(புலோலி நிருபர் திருச்செல்வம்]

சரித்திரப்பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு சுமார் 70,000 ரூபா செலவில தமிழ் நாட்டிலிருந்து 18 கருங்கல் விக்கிரகங்களும் 13 வெண்கல விக்கிரகங்களும் வருவிக்கப்படவுள்ளன. இவ் விக்கிரகங்களை வருவிப்பதற்கென இலஞ்சஒழிப்பு திணைக்கள பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. எஸ். சிவபாதம் (புலோலி) ஆலயதர்மகர்த்தா உறுப்பினர் திரு. எஸ். சங்கரப்பிள்ளை ஆகியோர் தமிழ்நாடு சென்றிருந்தனர்.

பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் பொய்கையாழ்வார், பூதத்தாள்வார், பேயாழ்வார், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுருகவியாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், கருடாழ்வார் ஆகிய விக்கிரகங்கள் வெண்கலத்திலும், கருங்கல்லினாலும் தனித்தனி உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் மகாலஷ்மி, சந்திரன், சூரியன், சங்கநிதி, பதுமநிதி ஆகிய விக்கிரகங்களும் கருங்கல்லினாலும் உருவாக்கப் பட்டுள்ளன.

வெண்கல விக்கிரகங்களை இந்திய மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற கும்பகோணம் ஸ்ரீ துர்க்காதேவி சிற்பசாலை ஸ்தபதி ஜே. சிவசங்கரஸ்தபதியும், கருங்கல் விக்கிரகங்களை காஞ்சிபுரம் சுப்பையாஸ்தபதியும் உருவாக்கியிருந்தனர். இவ் ஆலயத்திற்கு இந்த 31 விக்கிரகங்களையும் கொண்டுவர சுங்க அதிகாரி திரு. கே. நடராஜா [புலோலி] தொழிலதிபர் திரு. வி. பாலசுப்பிரமணியம் (கரவெட்டி) திரு. வி. பரஞ்சோதி (கரவெட்டி), மஸ்கன்ஸ் தொழிலதிபர் திரு. எஸ் சத்தியமூர்த்தி, கொழும்பு தேவிமெடிக்கல்ஸ் அதிபர் திரு. ஏ. வெங்கடாசலம், தென் இந்தியா சுப்பையா நடார் கோப்பறேசன் அதிபர் திரு. எஸ். இராஜேந்திரபாண்டியன் ஆகியோர் வழங்கிய உதவிகளும், ஒத்துழைப்பும் பாராட்டப்பட வேண்டியதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாட்டில் கோதண்ட இராமர் சிலையொன்று உருவாக்கப்பட்டு வருவதாகவும் வெகு விரைவில் அது கொண்டு வரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ் விக்கிரகங்கள் யாவும் வெகு விரைவில் ஸ்தாபிதம் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலயத்திற்கு 71 அடி உயரம் கொண்ட 7 தள இராஜ கோபுரம் பல லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் 99 அடி நீளமும் 28 அடி அகலமும் கொண்ட கல்யாண மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. பன்னிரு ஆழ்வார்கள், கோதண்டராமர், சங்கர நாராயணர், சப்தகன்னிகள், கெருடாழ்வார் கோவில்களும், கோபுர உள் இரு மருங்கிலும் சூயரி சந்திரர்களுக்குத் தனித்தனி கோவில்களும் கோபுர வெளி மருங்கில் சங்கநிதி, பதுமநிதிக்கு கோவில்களும் அமைக்கப்படவுள்ளன.

### "வடக்கு, கிழக்கு, மலையக

## மக்கள் மீதான வன்செயல் உடன் நிறுத்தப்படல்வேண்டும்'

[யாழ்ப்பாணம்]

" வடக்குக் கிழக்கு மலையக மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து வன்செயல்களும் உடன் நிறுத்தப்பட வேண்டும்" என்ற தீர்மானம் அரசாங்க லிகிதர் சங்க சேவை வருடாந்த மாநாட்டில் நிறைவேறியது.

யாழ் ஆசிரியர் சங்க மண்டபத்தில் திரு. வி. செ, கனகரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறின.

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து ஆயுதப் படைகளை வெளியேற்ற வேண்டும் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும் சுய நிர்ணய முறையில் இனப்பிரச்சினைக்குத் தீவுகாணவேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

'மீளவும் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் பழிவாங்கல் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், எமது சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட 85 அக்டோபர் 1ம் திகதி மந்திரிசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

" 1980ம் ஆண்டு பொது வேலைநிறுத்தத்தில் வேலையிழந்த அனைவரையும் மீளவும நட்டஈட்டுடன் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும்." (க)

### இந்தியாவிலிருக்கும் கூட்டணி

## பிரமுகரின் பெயரில் கோட்டில் மோசடி!

### எதிரிக்கு அபராதம்

[மட்டக்களப்பு]

தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருப்பவரான பட்டிருப்புத் தொகுதி தமிழர்விடுதலைக் கூட்டணிப்பிரமுகர் திரு. வி. தம்பிராசாவின் பெயரில் மோசடி செய்த, ஒருவருக்கு மட்டக்களப்பு நீதிமன்றத்தில் 250 ரூபா அபராதமும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தண்டனைக்கு இலக்காகியவர் கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த க. சிவலிங்கம் [45 வயது] என்பவராவார்.

மேற்படி கூட்டணிப் பிரமுகரான தம்பிராசா மட்டு. நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த 2 வழக்குகளில் சம்பந்தப்பட்ட இரு எதிரிகளை தலா 500 ரூபா ரொக்கப் பிணை செலுத்திப் பிணைஎடுத்திருந்தார். அவ்விரு வழக்குகளின் விசாரணைகளும் முடிந்து தீர்ப்புகளும் முடிந்து விட்டன.

தம்பிராசா தமிழ் நாட்டுக்குச் சென்று தஞ்சம் புகுந்திருப்பதால் அப்பிணைப்பணம் மீட்கப்படாமலிருந்தது, இதனை அறிந்து கொண்ட மேற்படி எதிரி, தம்பிராசாவின் பெயரில்மேற்படி பிணைப் பணத்தை மீட்க நீதிமன்றத்தில் மனுசமர்ப்பித்திருந்தார். அந்த மனுவின் பேரில் பிணைப் பணம் விடுவிக்கப்பட்டது.

எதிரி அப் பணத்துக்கான காசோலையைப் பெற்றுக் கொள்ள வந்தபோது தமது சொந்தப் பெயரான சிவலிங்கம் என்று உரியபத்திரத்தில் கையொப்பமிட்டார். இதனால் தம்பிராசாவின் பெயரில் மோசடி செய்த குட்டு வெளியாகியிருந்தது. உடனே எதிரியை மட்டக்களப்பு நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். ரவீந்திரராசா கைது செய்து மாவட்ட நீதிபதி ஊனுப் எம். ஐ காரியப்பர் முன்நிலையில் ஆஜர் செய்தார்.

எதிரிமுதலில் இரு வாரத்துக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் நடந்த விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து தண்டனை விதிக்கப்பட்டது.

[மா]

## மாங்குளத்தில் பதற்றம்

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பகுதியில் சோதனை நடத்திய இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொதுமக்களில் சிலர் காயமடைந்தனர்.

சில தினங்களுக்குமுன் இச் சம்பவம் இடம் பெற்றது

இத்துப்பாககிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் பீதியடைந்து நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

இப்பகுதியில ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் போக்கு

[5ம் பக்கம் பார்க்க]

## அகதிகள் உதவிப் பண்டம்: ஆயுதபாணிகளால் கடத்தல்!

[யாழ்ப்பாணம்]

செட்டிகுளத்திலுள்ள அகதி மக்களுக்கும் மசட்டிக்குளம் வாசிகளுக்கும் விநியோகிப்பதற்கென லொறிகளில் வந்த 300 மூடை அரிசி, மாவு என்பவற்றை ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் கடத்திச் சென்றுள்ளனராம்.

வவனியாவிலிருந்து இந்த உணவுப் பொருட்களை செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான லொறிகள் ஏற்றி வந்தபோது பூவரசங்குளத்தில் வைத்து இளைஞர்கள் பொருள்களுடன் லொறிகளைச் கடத்திச் சென்றுள்ளனராம் இது வரை லொறிகளும் திரும்பக் கொடுக்கப் படவில்லையாம்.

இராணுவ நடவடிக்கைகளால் காடுகளில் வாழும் செட்டிகுள மக்கள் தமது உணவுப் பொள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமையைத் தெரிந்து கொள்ளாமையினால் கூட்டுறவுக் கடைகளின் முன்னால் உணவுப் பொருள்களைப் பெற்றுச் செல்வதற்காக வந்து நின்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனராம்.

செட்டிகுளத்திலுள்ள பெரும்பாலான வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளனவாம். கால்நடைகளும் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

[ஐ]

# மருதானைக் குண்டுவெடிப்பு: செம்படை உரிமைகோருகிறது

[யாழ்ப்பாணம்]

அண்மையில் மருதானையில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகில் வெடித்த குண்டுகளுக்கு தாங்களே பொறுப்புஎன தமிழீழ செம்படை உரிமை கோரியுள்ளது. இது தொடர்பாக மேற்படி செம்படை விடுத்துள்ள அறிவித்தலில் கூறுயிருப்பதாவது:-

''கடந்தமாதம் 31-ம் திகதி திங்கட்கிழமை இரவு 8-40 மணிக்கு எமது செம்படைக் கெரில்லாக்களினுல் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் அநுராதபுர — கல்கமுவ பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் பொதியொன்று வைக்கப்பட்டது. இப் பொதியினை ஒருவர் எடுத்துச் சென்றபோது அதற்குள் மின் சாதன பொருட்களை கண்ணுற்று அதனை மருதானை தொழில்நுட்ப கல்லூரியருகே சந்தியில் விட்டுச்சென்றுர். இக்குண்டே இரவு 9-05 மணியளவில் வெடித்ததாகும் இதில் எமது புரட்சிகர வாசகமான ''தாயகம் இன்றேல் வீரமரணம்'' பொறிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

''ஸ்ரீலங்கா பயங்கரவாதத்தினை அழித்தொழிக்கும் எமது நடவடிக்கைகள் மூலம் ஸ்ரீலங்கா பொருளாதாரத்தினை சீர்குலைக்கும் திட்டங்களில் இதுவும் ஒன்ருகும்.''

## உலக தொலைக்காட்சி சேவை: பி. பி. ஸி. ஆரம்பிக்கிறது!

[ராய்ட்டர்]

உலகப் புகழ்பெற்ற ஒலிபரப்புச் சேவையான லண்டன் 'பி. பி. ஸி' சர்வதேச தொலைக்காட்சி சேவையென்றினை வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

தற்சமயம் பி. பி. ஸி. 150 நாடுகளில் 37 மொழிகளில் தனது ஒலிபரப்புச் சேவையை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# மயிலிட்டியிலிருந்து விவசாயக் குடும்பங்கள் வெளியேற்றம்

(மாவிட்டபுரம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்குள் அடங்கும் மயிலிட்டி வடக்குப் பகுதியில் விவசாயம் செய்துவந்த 53 விவசாயக் குடும்பங்களை வெளியேறுமாறு பணிக்கப்பட்டதையடுத்து பெரும்பாலனவர்கள் தம் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர்.

ஆனலும் அவ்விவசாயிகள் மயிலிட்டி வடக்கு, கரை பிரஜைகள் குழுக்கள் மூலம் பிரிகேடியரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதையடுத்து அவர்கள் காலை 6மணியல் இருந்து மாலை 6 மணிவரை பயிர்களை பராமரிக்கலாம் என்றும் பயிர்களை அறுவடைசெய்ய உதவியாளர்களை மாலை 2 மணி முதல் 5 மணி வரை கூட்டிச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டின்படி விவசாயிகள் செயல்பட்டுவந்தபோதும் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் ஆயுதப் படையினரின் நடமாட்டம் அப்பகுதியில் அதிகரித்து வருவதால் விவசாயிகள் மத்தியில் பெரும் பதற்றமும், பீதியும் ஏறபட்டுள்ளது.

## மாங்குளத்தில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வரத்துச் சேவைகளும் தடைப்பட்டன

### இராணுவம் ரோந்து

வவனியா முகாமிலிருந்து இராணுவத்தினர் நடைபவனியாகவும் தனியார், இ.போ.ச. வாகனங்களிலும் நேற்று ரோந்து சேவையிலீடுபட்டிருந்தனர்.

வவனியா முகாமிலிருந்து நேற்றுக்காலை 6-மணியளவில் புறப்பட்ட இராணுவத்தினர் நண்பகல் ஒரு மணியளவில் ஓமந்தையைச் சென்றடைந்தனர். [மா]

## பலாலி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளாவண்டும் என்றும் யாழ். அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வா)

## ஹெலிகொப்டர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''கூடடடியில் பருத்தித்துறை தொண்டமானுறு வல்வெட்டித்துறை காங்கேசன் துறைப்பகுதிகளில்உள்ள பாதுகாப்புப்படையினரின் முகாம்களை பயங்கரவாதிகள் தாக்குவதற்குத் திட்டமிட்டு வருவது பாதுகாட்புப் படையினருக்குத் தெரியவந்துள்ளது தீவிரவாதிகளின் இச்செய்கையின் நோக்கம் இராணுவத்தினரை ஆத்திரமடையச்செய்து பதில்தாக்குதலினுல் பொதுமக்களை சாயப்படுத்துவதும், இறக்கச் செய்வதுமே.

இந்நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் அவதியுறுவதை எவ்வளவு தூரம் தவிர்க்கமுடியுமோ அவ்வளவு தூரம் தவிர்க்கப் பாதுகாப்புப்படையினர் முயற்சிப்பர். ஆனுல் தாக்குதலுக்கு நடுவில் பொதுமக்கள் சிக்கிக்கொண்டால் அவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவதம் அளிப்பது கடினமாயிருக்கும்''

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்ற மல்லாகம் இளைஞர் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 6ம் திகதி ஞாயிறன்று காலை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் எஸ். அருள்சோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

## இன்று

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி. ப. 1.45 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

பாடசாலை அதிபர் திருமதி பி. கந்தசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விளையாட்டுப் போட்டியில் மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றுர். வண பிதா பி. எம். இம்மானுவல் அடிகளார் மங்கள விளக்கேற்றி விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்து வைப்பார். சிறப்பு விருந்தினராக இ. த. ஆ. சங்க யாழ். மாவட்ட செயலாளர் திரு. வி. எஸ் சிவபாலசிங்கம் கலந்து கொள்கின்றுர் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்குவார்.

# ராணுவப் பொருள் கொள்ளை: லொறியுடன் மூவர் முகாமில்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து வவனியா சென்றலொறியும், அதிலிருந்த மூவரும் மாங்குளம் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியாருக்கு இந்த லொறி சொந்தமானது.

கடந்த 2ம்திகதி புறப்பட்ட இந்த லொறி கொக்காவில் இராணுவமுகாமை அண்மித்ததும் தடுத்துநிறுத்தப்பட்டது அங்குவைத்து மாங்குளம் முகாமுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி பொருள்கள் ஏற்றப்பட்டன. இப்பொருள்களுடன் மாங்குளம் முகாமை நோக்கிச்சென்ற அந்தலொறி இடையில் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் தடுத்துநிறுத்தப்பட்டு அதிலிருந்த பொருள்கள் அத்தனையும் கொள்ளையடிக்கப்பட்டனவாம். பின்னர் லொறிச்சாரதியும், கிளீனரும், கடைமுதலாளியுமாக லொறியுடன் சென்று மாங்குளம் முகாமில் புகார்செய்ததைத்தொடர்ந்து அவர்கள் அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். [மா]

## மக்கள் வங்கி..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது

அத்துடன் வங்கி ஊழியர்கள் தமக்கிருக்கும் லீவுகளை இக்காலத்தில் பயன்படுத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனராம்

இதன் காரணமாக வங்கி ஊழியர்கள் மத்தியில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது

வங்கிகள் திறக்கப்படாமல் இருக்கின்ற வேளையில் ஏன் தமது சொந்தலீவுகளைப் பயன்படுத்த வேண்டும் என ஊழியர்கள் பேசிக் கொள்வதாகவும் அறியப் படுகின்றது.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பண்டிதமணிக்கு நாளை அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தமிழ்ப்பேரறிஞர், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் அஞ்சலிக் கூட்டம் கொழும்பு தமிழ்ச் சங்க நிலையத்தில் நாளை 6ந் திகதி ஞாயிற்றுக்கிழமைமாலை நடைபெறவுள்ளது.

மூன்னுள் உயர்நீதிமன்றநீதியரசர் கலாநிதி எச். டப்ளயு, தம்பையா தலைமையில் நடைபெறும். இவ்வஞ்சலிக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, தமிழ் அலுவல்கள் அமைச்சர் திரு செ. இராசதுரையும் கலந்துகொள்வார்.

அஞ்சலிஉரைகளைகொழும்பு விவேகானந்தசபைப் பொதுச் செயலாளர் திரு. க. இராசபுவனீசுவரன் இந்துமாமன்றப் பொருளாளர் திரு ஆ குணநாயகம், கதிர்காமத்தொண்டர் சபைத்தலைவர் திரு. ஆ. சின்னத்தம்பி, தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ சிவகுருநாதன, வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. ஆ சிவநேசச்செல்வன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்பகுதிப் பணிப்பாளர் திரு. வி ஏ திருஞானசுந்தரம் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி பொ. பூலோகசிங்கம், பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபையைச் சேர்ந்த திரு. அ பஞ்சாட்சரம், கொழும்புத் தமிழ்ச்சங்க இலக்கியக்குழுத் தலைவர் கலாநிதி க செ நடராசா ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

கவிதை அஞ்சலியை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தை சேர்ந்த திரு த. கனகரத்தினம், அரச மொழித்திணைக்களத்தைச்சேர்ந்த திரு.வ. சிவராசா ஆகியோர் செலுத்துவர்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தின் போது பண்டிதமணியின் நூல்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன. [ஐ]


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

Sony 20 T.V. 2020 National டெக் NV 366, National டெக் செற் 250 W Tosiba 20'' B/W, S. T. L வீடியோ கிளப், திருநெல்வேலி. [C 1608]

New 'adler' English typewriter for immediate sale. Contact: K. Ganeshe murthy ''Cheddicholai', Alaveddy north, Alaveddy. [C-1614]

இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்
**கௌரீசன் மினி**
[மனேகராவுக்கண்மை]
தினசரி 10-30, 2-30, 4-15, 7-15, 9-30
Mario Cortcsi, Bruno Espossido
அற்புத நடிப்பு
''STREET KILLERS''
(புதிய வெளியீடு)
C 1613

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
கார்த்திக் - சவுண்டமணி
**தர்மபத்தினி**

**LIDO Jaffna**
10-30, 2-30, 6-30
கமல்-ஸ்ரீதேவி-ரஜனி
**16 வயதினிலே**
புதிய பிரதி (கலர்)

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

## பகிரங்க ஏல விற்பனை

**யாழ். அபிவிருத்திச் சபை உப- அலுவலகம், சுன்னுகம்.**

சுன்னுகம் உப- அலுவலகத்திற்குரிய நிலைகள், பழைய இழுபறி இயந்திர அடித்தட்டு, பழைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன 11-4-86ந் திகதி முற்பகல் 10-00 மணியளவில் சந்தை அலுவலகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித்தொகை முழுவதையும் உடன் செலுத்தி அன்றே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.
யாழ். அ. சபை
உப அலுவலகம்,
சுன்னுகம்.
1-4-86. [A 548]

## இரண்டாண்டு நினைவஞ்சலி



**நடராசா யோகராசா**

அன்னையின் மடியில்: 05-11-1956
ஆழ்பவன் அழிப்பு: 28-03-1984
திதி: 05-04-1986

யோகம்! நீயில்லாது நிம்மதிக்கு பஞ்சமிங்கே. ஒரு நாள் நீயில்லாத ஒளிராத உலகினில் ஈராண்டு ஓடியதோ? யோகம்! வாழ்நாளில் யார் வருவார் நீ இல்லா இடம் நிறைக்க!

உம் பிரிவால் வாடும்
அன்பு அம்மா,
சகோதரர்கள்.
சகோதரிகள்,
மைத்துனர்கள் அண்ணி,
மருமக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்

7 ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய். A 549

## பணிவான வேண்டுகோள்

ஆனைக்கோட்டையில் தனியார் வைத்திய நிலையமொன்றை நடத்திவரும் என்னிடமிருந்து இம்மாதம் முதலாம் திகதி இரவு 7-30 மணியளவில் எனது 84 ஸ்ரீ 6756 இலக்கமுடைய யமஹா 125 மோட்டார் சைக்கிள் ஒரு சில இளைஞர்களால் திருப்பித் தருவதாக உறுதி கூறப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது. ஆனல் இது இன்றுவரையும் திருப்பித்தரப்படவில்லை நோயாளிகளை அவர்களின் வீடுகளில் சென்று பார்ப்பதற்கும், மூளாயிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெற்றுவரும் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அங்கு சென்று விரிவுரைகள் நடாத்துவதற்கும் இந்த வாகனம் மிகவும் அவசரமாக எனக்குத் தேவைப்படுகிறது தயவுசெய்து இதனை எடுத்துச் சென்றவர்களிடமிருந்து சமுதாய நலன்கருதி உடன் இதனைப் புனித இயக்கங்கள் பெற்றுத்தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ஆர். ஜே. நதானியேல்.
ஆனைக்கோட்டை.
(C 1611)

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 23 (5 - 4 - 1986)
கிழமை- சனி
திதி- ஏகாதசி
மு. ப. வரை
நக்ஷத்திரம்- அவிட்டம்
பி. ப. வரை

மேடம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்த கால எண்ணங்கள் அலை மோதும். சகோதர வழியாலும் சஞ்சலம் தோன்றும்.

இடபம்: வாழ்வில் இன்று வெற்றித் திருநாளாகும். எதிலும் அதிர்ஸ்டம் உங்கள் பக்கமே இருக்கும். வெளியிடத்துத் தொடர்புகள் சிறப்பைத்தரும்.

மிதுனம்: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள் தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகும் புண்ணிய யாத்திரையுமுண்டு.

கடகம்: பணம் பலவழிகளிலும் செலவாகும் அந்நியர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். பிரயாணத்தின் மூலம் பொருள் நழுவக்கூடும்.

சிங்கம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்சினைகளில் சுமூகமான நிலை தென்படும் சுற்றாடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்கும் பெருகும்

கன்னி: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு நண்பரின் கடிதம் வேதனையைத்தரலாம் மனத்திடம் வேண்டும்.

துலாம்: பூமியால் லாபமுண்டு புத்திரர் புகழும் சேரும். உடல் நலமும் சிறிது பாதிக்கப் படக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுக்சவும்.

விருச்சிகம்: உத்தியோக உயர்வுக்கும். உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்த நாள், திருப்திகரமான இடமாற்றமும் ஏற்படலாம்.

தனுசு: உழைப்பினுல் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரக்துறையில் விருத்தியுண்டு. உயர் கல்வியில் ஈடுபடுபவர் விடாமுயற்சி எடுக்கவும்.

மகரம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் தோன்றும்.

கும்பம்: மனதில் விரக்தி தோன்றும். உடல் நலமும் பாதிக்கப்படும். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

மீனம்: திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. பிறருடைய நன்மதிப்பை பெறுவீர்கள். கல்வித்துறையில் சிறப்பான தினமாகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## தாண்டவன வெளியில் கலகலப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு எல்லைவீதியிலுள்ள தண்டவன வெளியில ரோந்து சென்றபாதுகாப்புப் படையினரை நோக்கி கிறனேட் வீசப்பட்டது. பாதுகாப்புப் படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

நேற்று முன்தினம் காலை இச்சம்பவங்கள் இடம் பெற்றன.

'கிறனேட் வெடித்த சத்தமும், துப்பாக்கிச் சூட்டுச்சத்தமும் கேட்டதைத் தொடர்ந்து அங்கு அதிரடிப் படையினர் ரோந்து புறப்பட்டனர். அவர்களைக் கண்டு சிலர் ஓட்டமெடுத்த போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் ட்டது.

இச்சம்பவத்தின்போது எவருக்கும் சேதமேற்படவில்லை என அறியப் படுகிறது. (மா)

# மின் ஊழியரைத் தாக்கியவர் மன்னிப்புக் கோரினர்

(வேலணை)

வேலணைப் பிராந்திய மின் அத்தியகட்சர் காரியாலயத்திற்கு கடமைக்குச் சென்ற காரியாலய மின்பாதையாளர் [லைன்ஸ்மன்] திரு. கருணதாச என்பவரை இனம் தெரியாத நபரொருவர் கைகளாலும் காலாலும் கடுமையாகத் தாக்கி அவரை வேலைக்குச் செல்லாதவாறு தடுத்தாராம்.

இப்படித் தாக்கப்பட்ட காரியாலய ஊழியருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக கடந்த 28ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணி முதல் மறுநாள் நண்பகல் வரை தீவுப்பகுதிகளுக்கான சகல இடங்களுக்கும் செல்லும் மின்சார விநியோகங்கள் யாவும் துண்டிக்கப்பட்டிருந்தன இதனுல் தீவுப்பகுதி எங்கும் இருள் சூழ்ந்துகாணப்பட்டிருந்ததுடன் பொது சேவைகளும்பாதிக்கப்பட்டன

இவ்வித பாதிப்புக்குள்ளானவர்களும் பொதுமக்களும் இளைஞர்களும் ஒன்றிணைந்து மின்சாரசபை ஊழியரைத் தாக்கியநபரை தேடிப்பிடித்து பொதுமக்கள் மத்தியில் வைத்துத் தாக்கப் பட்ட நபரிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கும்படி செய்ததைத் தொடர்ந்து தீவுப்பகுதியின் சகல இடங்களுக்குமான மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

## டானியல் அஞ்சலி கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம். மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம், முன்னேடிகள் இலக்கியக்குழு, கலை-இலக்கிய பத்திரிகை நண்பர்கள், மாற்று சஞ்சிகைவட்டம் ஆகியன இணைந்து திரு. கே. டானியல் மறைவு குறித்து அஞ்சலிக் கூட்டம் ஒன்றினை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர்இந்து விடுதியில் நடத்தவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்இவ்வஞ்சலிக்கூட்டத்தில் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி வி கே. சிவஞானம், பேராசிரியர் சு. சண்முகதாஸ், திரு. க. சொக்கலிங்கம் வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ் கனகரத்தினம், பனம்பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. க. ந ராசா மற்றும் பலர் பேசுவர்.

# "பாடசாலையின் வளர்ச்சி பெற்றேர்கையில் தங்கியுள்ளது
## அபிவிருத்திச்சங்க கூட்டத்தில் கருத்து

[யாழ்ப்பாணம்]

"பாடசாலைகளின் வளர்ச்சி பெற்றேர்களின் கையில்தான் தங்கியுள்ளது. சீரானபாடசாலை நிர்வாகத்திற்கு எந்த விதமான இடர்பாடுகளும் விளைவிக்காமல் பெற்றேர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்."

மாங்குளம் மகாவித்தியாலத்தின் அபிவிருத்திச்சங்கக் கூட்டத்தில் உரையாற்றிய வித்தியாலய அதிபர் ஆ சண்முகரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்

இக் கூட்டத்தில் அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; இப் பாடசாலையைப்பொறுத்தவரையில் நான் அதிபராக இருந்தாலும் கூட என்னை ஒரு பெற்றேராகவே நினைக்கிறேன். எனது பிள்ளைகள் நான்குபேரும் இப்பாடசாலையிலேயே கல்விகறறு வருகின்றூர்கள்" என்று கூறினர்.

## முறைசாராக் கல்வி நெறி

(இணுவில்)

இணுவில சைவப்பிரகாச மகாவித்தியாலய முறைசாராக் கல்விநெறி (உடைஅமைப்பு) எதிர்வரும் சனிக்கிழமைகாலை ஆரம்பமாகவுள்ளது

மேற்படி வகுப்பை வித்தியாலய அதிபர் ஆரம்பித்து வைப்பார். (ச)

## சில்வஸ்டார் வெற்றி

[அராலி]

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கான 22 வயதுக்குட்பட்டோர் கலந்துகொள்ளும் உதைபந்தாட்டப்போட்டி அண்மையில்அராலி மாதத்தை மைதானத்தில் நடைபெற்றது.

முதல்சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கான வட்டு விளையாட்டுக் கழகமும் சில்வஸ்டார் விளையாட்டுக் கழகமும் இரண்டாவது சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டன.

இடைவேளைக்குமுன் சில்வஸ்டார் விளையாட்டுக் கழகம் 2 கோல்களையும் வட்டு விளையாட்டுக்கழகம் ஒரு கோலும் போட்டன. இடைவேளைக்குப்பின் போட்டி மிகவும் கடுமையாக இருந்தது. இதற்கிடையில் சில்வஸ்டார் கழகம் மேலும் ஒரு கோலைப் போட்டு வெற்றியீட்டியது.

இப்போட்டியின்போது விளையாட்டு வீரர்களுக்கிடையில் ஏற்பட்டமோதலில் சிலர் காயமடைந்ததாகத் தெரிய வருகிறது.

## கல்லூரி மாணவனைக் காணவில்லை

[கிளிநொச்சி]

கிளிநொச்சியிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவனைக் காணவில்லையென புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இம் மாணவனைச் சீருடையினர் கைது செய்திருக்கலாமென அஞ்சப்படுகிறது. மாணவனுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது பெற்றேர் கவலை கொண்டுள்ளனர் கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவும் இயங்காததால் சீருடையினருடன் தொடர்பு கொள்ள மார்க்கமின்றிப் பெற்றேர் இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளனர்.

## வருடாந்த பொதுக் கூட்டம்

[புலோலி]

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய 10-ம் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் வேலும்மயிலும் மட மண்டபத்தில் மகாசபைத் தலைவர் சட்டத்தரணி வி. செல்லத்தம்பி தலைமையில் நடைபெறுமென ஆலய மகாசபைச் செயலாளர் திரு. வ. ப இராமலிங்கம் அறிவித்துள்ளார்.


எம் டீ சோப் வழங்கும் புத்தாண்டு அதிர்ஷ்டம்

11 அரிய பரிசுகளைத் தட்டிக்கொள்ள முந்துங்கள்!

1-வது பரிசு:
ஒரு புதிய துவிச்சக்கர வண்டி.

2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம் பரிசுகள்:
புதிய நைலெக்ஸ் சேலை.

7-ம், 8-ம், 9-ம், 10-ம், 11-ம் பரிசுகள்: பாடசாலைப்பை (SCHOOL BAG)

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றூர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 4 x 2 அங்குல அளவு வெள்ளைக்கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீல சோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரைபார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

✶ முதலாவது பரிசைப் பெறுபவர் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 250/- பெறுமதியான பொருட்கள் இனும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 12-4-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




எம் டீ
சோப்
விலை ரூபா 2/- மட்டுமே




தேசிக்காய் வாசனை கொண்ட தரமான எம் டீ தயாரிப்புக்களைப் பாவித்து நன்மையடையுங்கள்.

தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள். (A 341)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி பீற்றர் மேரிறேஸ் (கிளி)**

மலர்வு: 1957-10-16

உதிர்வு: 1985-04-05

எனது ஆருயிர் தெய்வமே, உமது பிரிவு என்னை வாட்டுகிறது. நீர் பிரிந்தாலும் உமது நினைவு என்னைவிட்டுப் பிரியாது. உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

ஒவ்வொரு கணமும் உம்மை நினைத்து உருகும்:

அன்புக் கணவன்,
உறவினர்கள்.

இல 4, அடப்பன் றேட்,
யாழ்ப்பாணம்.

C 1590

## நீர்வைக்கந்தன் உற்சவம் நாளை ஆரம்பம்

[நீர்வேலி]

நீர்வேலி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 25ம் திகதி நடைபெறும் பூங்காவனத் திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவு பெறும்.

14ம் திகதி திங்கட்கிழமை அக்ஷய வருடப்பிறப்பை முன்னிட்டு விஷேச பூஜைகள் நடைபெறும். 15ம் திகதி செவ்வாய் மஞ்சத்திருவிழாவும், 20ம் திகதி பிற்பகல் மாம்பழத்திருவிழாவும், 21ம் திகதி பிற்பகல் வேட்டைத் திருவிழாவும், 22ம் திகதி சப்பரத் திருவிழாவும் நடைபெறும் தேர்த்திருவிழா 23ம் திகதி புதன்கிழமை காலை அடுத்த நாள் தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

ஆதீன பிரதம குரு பிரம்ஸ்ரீ சு. இராஜேந்திரக குருக்கள் உற்சவக்கிரியைகளை நடாத்தி வைப்பார்.

## வீரகத்தி பிள்ளையார் ஆலய மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் இம்மாதம் 6ந் திகதி ஞாயிற்றுக்கிழமைஆரம்பமாகி 15-ந்திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

6 ந் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும் தினமும்பகல் திருவிழாக்களும், மாலைத்திருவிழாக்களும் இடம் பெறும். 14 ந் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 15 ந் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

16 ந் திகதி வசந்த உற்சவ மாலையும், 17 ந் திகதி பிராயசித்த அபிஷேகமும் அன்னதானமும் அத்தியடி இளைஞர் சங்கத்தினால் நடடத்தப்படும்.


[ஐ]

## குழு உறுப்பினர்கள்

[யாழ்ப்பாணம்]

அரசாங்க லிகிதர் சேவை சங்க யாழ் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கீழ் காணுவோர் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் வீ. எஸ் கனகரத்தினம், துணைத்தலைவர். எஸ். கந்தசாமி, செயலாளர் தி. தவராசா, துணைச் செயலாளர் வி. மகாலிங்கம், பொருளாளர் எஸ். ஆர் ஜெயப்பிரகாசம், செயற்குழு உறுப்பினர்கள் வ. பொன்னம்பலம், செல்லையா, எம் வைத்தியகுமார், திருமதி எஸ் சிவஞானம். [க]

## நன்றி நவிலலும் கிரகயக்ஞ அழைப்பும்



தோற்றம்: 07-02-1906

மறைவு: 25-03-1986

அன்புடையீர்,

25-03-1986 செவ்வாய்க்கிழமை சிவபேறெய்திய எமது தந்தையார் ஐயாத்துரைக் குருக்கள் ஜம்புகேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஈமக்கிரியைகளில் நேரில் பங்கு கொண்டோருக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் உதவிகள் பல புரிந்த அன்பர்கள் அனைவருக்கும் எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 06-04-1986 ஞாயிற்றுக்கிழமை எமது சுதுமலை இல்லத்தில் நடைபெறும் கிரகயக்ஞ வைபவத்தில் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் குடும்ப அங்கத்தவர்கள் சார்பாக வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

''கிரியாகலாப முக்தாமணி''
ஜ. மகேஸ்வரக் குருக்கள்

[சுதுமலை, புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள், நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆதீன குருக்கள், நயினை வீரபத்திர சுவாமி கோவில்ஆதீன குருக்கள், புங்குடுதீவு கிழக்கு ஞ்சியம் திருநந்தசுவாமி கோவில் ஆதீன குருக்கள் ]

C 1587

## ஆசிரியமணி நா. தம்பிரத்தினம்



தம்பிரத்தினம் அவர்கள் ஓர் நல்லாசிரியன், சந்தமுடைய காந்தீயவாதி. பெரியகடை பாரதி பாஷிய பாடசாலையின் தலைமையாசிரியராகப் பலகாலம் தொடர்ந்திருந்து சேவையாற்றும் வாய்ப்புப் பெற்றவர், யாழ்ப்பாணம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அண்மையில் சில யார் தூரத்தில் பாரதி பாஷியபாடசாலை விளங்கியமையாலும், முகாமையாளர், தலைமையாசிரியர் ஒத்துழைப்பாலும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆசிரியர் சங்கக் கூட்டங்கள், மற்றைய தொழிலாளர் சங்கக் கூட்டங்கள் காந்தீய ஆன்மீக சம்பந்தமான பல்வேறு வகையான பொதுக்கூட்டங்கள் யாவற்றிற்கும் இந்த பாரதி பாஷிய பாடசாலையே மத்திய தானமாய் விளங்கியதற்கு நா. தம்பிரத்தினம் அவர்களது மனப்பாங்கும் ஓர் பிரதான காலாக இருந்ததெனலாம்.

1925 ம் ஆண்டில் ஆரம்பமான வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தில் 1940 ம் ஆண்டளவிலிருந்து நா. தம்பிரத்தினம் அவர்கள் பலகாலம் காரியதரிசி, தலைவராகத் தொடர்ந்து சேவையாற்றினார். அவரது அன்பிற்குப் பாத்திரமான முன்னாள் தலைவர்கள் ஆசிரியமணிகள் ம. வைத்திலிங்கம், வி. யே. யோன் பிள்ளை, வி. ஆர். இரத்தினம், என்போரது நன்மதிப்பைப் பெற்ற சிஷ்யர் போல ஆசிரிய உலகிற்குப் பெருந்தொண்டாற்றினார்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் கிளைகளாக 1930 — 35 ம் ஆண்டுகட்கு இடையில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் வலி கிழக்கு, வலி வடக்கு, வலிமேற்கு வடமராட்சி, தென்மராட்சி, தீவுப் பகுதி உள்ளிட்ட ஒன்பது கிளைச் சங்கங்களின் ஆதரவோடும் மேற்குறித்தபோட்டிகள் விழாக்களை நடத்தி இலங்கையிலுள்ள ஆசிரியர் சங்கங்களில் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஓர் முன்மாதிரியாக விளங்கி தமிழ் மாணவர் கல்வி கலாசார விருத்திகட்கு உதவியது. சுயபாஷா ஆசிரியர்களை உதவி நன்கொடைபெறும் தமிழ்ப் பாடசாலையாசிரியர்களை, மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் அரசினர் நடத்திய காலை 1932 ல் வெளிவந்த பெரேரா விசாரணைச்சபையறிக்கை 1939 ல் வெளிவந்த குணதிலகா-ஜோன்ஸ் விசாரணைச் சபையறிக்கை, இவற்றால் சுயபாஷா ஆசிரியர்கட்கு நியாயங் கிடைக்காத போது தென்னிலங்கையிலுள்ள சிங்கள ஆசிரியர் சங்கங்களுடன் சேர்ந்து அறிக்கைகள், மனுக்கள் தயாரித்து அரசியல் தலைவர்களையும் பேட்டிகண்டு ஓரளவு வெற்றி காணுவதற்கு இடையறாத முயற்சி செய்தவர். இலங்கையெங்கணும் பரந்திருந்த உதவி நன்கொடைபெறும் பாடசாலை ஆசிரியர்கள் பலர் முகாமையாளர்களது விருப்பு வெறுப்புகட்காளாகி பெரும் இன்னல்கட்குள்ளாக்கப்பட்ட போது அவற்றிலிருந்து விமோசனம் பெறவும் ஆங்கில ஆசிரியர்கட்கும் அரசினராசிரியர்கட்குரிய சலுகைகளை உதவி நன்கொடை பெறும் ஆசிரியர்கட்குக் கிடைக்கச் செய்யவும், இவைபோன்ற வேறுவகையான இன்னல்களினாலும் தாக்கமடைந்தவர்களைப் பாதுகாக்கவும் பலம்கொண்ட ஓர் ஆசிரியர் சங்கத்தினை நிறுவ வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளராகவிருந்த நா. தம்பிரத்தினம் அவர்களது பெருமுயற்சியால் 25-9 1945 ல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் இலங்கையில் பல பாகங்களிலுமிருந்து வந்த தமிழாசிரியர் பலரையும் அடக்கிய பொதுக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஸ்தாபிதமானது. ஒரு வருடத்துள் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழாசிரியர் இதன் அங்கத்தவராயினர். இதன்மூலம் இலங்கையெங்கணும் பரந்துபட்டு வாழ்ந்த தமிழாசிரியர் சார்பில் ஓர் மறுமலர்ச்சியை உண்டாக்க நா தம்பிரத்தினம் அவர்களே பெரும் காலாயிருந்தார். பல மாகாண கிளைச் சங்கங்களை நிறுவி இலங்கையெங்கணுமுள்ள தமிழாசிரியர், தமிழ்ப் பாடசாலைகள், தமிழ் மாணவர் நலனுக்காக இச்சங்கம் பெரிதும் உதவியது. பலவருடகாலம் தொடர்ந்து தம்பிரத்தினம் அவர்கள் இதன் தலைவராகச்சேவையாற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

1950 ம் ஆண்டு ஆரம்பமான இலங்கையிலுள்ள பலம்வாய்ந்த ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச்சபை 1954 வரை சீராகஇயங்கியது நாடு சுதந்திரமடைந்து தேசிய பாஷைகள் போதனா மொழிகளாகி ஒரே மாதிரியான பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்கின்ற ஆசிரியர்களிடையே சுயபாஷா ஆங்கிலம் எனச் சம்பளவேறுபாடு காட்டப்பட்ட காலை சம வேலைக்கு சம சம்பளம். சம தராதரத்துக்குச் சம சம்பளம் என்ற கோரிக்கையை வைத்துப் போராட முற்பட்ட போது ஆங்கில ஆசிரியர்களையுள்ளடக்கியதான பெரிய சங்கம் பின்வாங்கியது, அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், லங்கா ஜாதீய குருசங்கம் இரண்டும் இணைந்து சுயபாஷா ஆசிரியர் முன்னணியமைத்துப் போராடியது. தலைவர் எல். மேத்தானந்தா, உபதலைவர் நா. தம்பிரத்தினம், இணைக் காரியதரிசிகள் பீற்றர் டி. சில்வா, குமாரசாமி என்போரது பெருமுயற்சியால் சுயபாஷா ஆசிரியர்களது கோரிக்கைகள் பலவற்றில் வெற்றி காணப்பட்டது ஆசிரியர் உலகில் பெரும்பங்கு கொண்டு உழைத்த தம்பிரத்தினம் அவர்கள் இளைப்பாறிய பின்பும் காலத்துக்காலம் அவரது ஆலோசனைகள் சங்கத்துக்குக் கிடைத்துவந்தது. அவருடைய தன்னலமற்ற சேவை ஈழநாடு பத்திரிகைக்கும் சிறிது கிடைத்தது.

இத்தகைய பெரியோரின் நாமம் நிலைக்க ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

க. இ. குமாரசாமி

## அரங்கேற்றம்

[பண்டத்தரிப்பு]

மாதகலைச் சேர்ந்தவரும், அடையாறு இலட்சுமணனின் மாணவியுமான செல்வி சந்திர காந்தா சங்கரப்பிள்ளையின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது, இதில் பிரதம அதிதியாக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வட பிரதேச ஆணையாளர் டாக்டர் சுசந்தன் இன்னாசித்தம்பி கலந்து கொள்வார் யாழ். மாநகர சபை விசேட ஆணையாளர் திரு சீ வீ. கே. சிவஞானம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.


ஓம்சக்தி

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

**அறிவித்தல்**

புதுவருட தினத்தை முன்னிட்டு தூர இடங்களில் இருந்து வரும் அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்கப் புதுவருடத்தன்று தேவஸ்தானம் அதிகாலை 5-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை திறந்திருக்கும்.

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா,
தர்மகர்த்தா.

சுபம் C 1574)



Jaffna College
Technical Institute, Vaddukoddai

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING**

New Course Commences in May 1986 using Commodore, IBM-PCXT and CBM machines

Module I- BASIC LANGUAGE One semester
Module II- COBOL LANGUAGE One semester

The syllabi are designed on the City and Guilds of London Institute examination standard including subjects Mathematics, English, Management Studies, Data Processing and System Analysis.

Both modules will be conducted during each semester of 18 weeks duration, as full time study offering 80 machine hours per student.

Course Fee: Rs. 1,500/- per semester
Deposit: Rs. 200/-

Admission Requirements: Students of either sex, with G.C.E. (O/L) credit pass in English, Maths and Science or G.C.E. (A/L) two passes or any other professional qualification.

Apply on forms (Rs. 5/-) available at office to Director, J.C.T.I., Vaddukoddai before 30-4-86.

Director. (A424)

# "இன்றைய இலக்கியங்கள் நாளைய வரலாறுகின்றன!"

## 'வெள்ளோட்டம்' வெளியீட்டுவிழாவில் ஆணையாளர் சிவஞானம்

[யாழ்ப்பாணம்]

''இன்றைய இலக்கியங்கள் நாளைய வரலாறுகின்றன'' என்று எழுத்தாளர் கோப்பாய் சிவத்தின் 'வெள்ளோட்டம்' குறுநாவல் தொகுதியின் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் யாழ். மாநகர சபை ஆணையாளர் சி. வி.கே. சிவஞானம் கூறினார்.

யாழ். இலக்கிய வட்டம் நல்லூர் இந்து விடுதியில் இவ்வெளியீட்டுவிழாவைசிறப்பான முறையில் நடத்தியது

இலக்கிய வட்டத் தலைவர் சசிபாரதி சு. சபாரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஆணையாளர் திரு. சிவஞானம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இலக்கியங்கள் யதார்த்த ரீதியான சிந்தனைகளை முன்வைத்து எழுதப்படவேண்டும். அவ்வாறு அமையும் போது தான் காலத்தால் அழியாததாக அவை அமையும். சமகாலப் படைப்புக்களையே மக்கள் எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய படைப்புக்கள்தான் பிற்காலத்தில் ஆய்வுகளுக்கு பயன்படுவனவாக அமையும்

''ஈழத்தைப்பொறுத்தவரை எழுத்தாளர்கள் பலவித கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். வெளியீட்டுத் துறைக்குத் தமிழ் மக்கள் போதிய ஆதரவு நல்கவேண்டும்.

ஈழத்து இலக்கியத்துறை வளர்ச்சிக்கு யாழ். இலக்கிய வட்டம் பெரும் பங்களிப்பை யாற்றி வருவது மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கிறது

கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரை நிகழ்த்துகையில் ''நாங்கள் மனிதர்களை மனிதர்களாகவே பார்க்கிறோம். சாதிகளைப்பார்ப்பதில்லை. இலக்கியக் காரரின் படைப்புக்கள் சமூகத்தின் சரியான தளத்தில் இருந்து படைக்கப்படவேண்டும் சமூகத்தின் இன்றைய போக்கையும் அதற்கான தீர்வுகளையும் இன்றய எழுத்தாளன் வெளிக்கொணர முன்வரவேண்டும்'' என்றார்

செங்கை ஆழியான் பேசுகையில், ''ஈழத்தில் எழுத்தாளர்களுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் எழுத்துலகில் பெரும் தேக்கம் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. இந்நிலையைப் போக்க இளைய தலைமுறையினர் எழுத்துத்துறையில் உற்சாகமாக ஈடுபடவேண்டும்டும்'' என்றார்,

செம்பியன் செல்வன் பேசுகையில், ''பெண்கள் வீட்டில் இருந்து முடங்கிக்கிடந்த காலம்போய் விடுதலை உணர்வு மிக்க வீரம் செறிந்தவர்களாக மாறியகாலம் உருவாகிவிட்டது. எழுத்தாளர்கள் இவர்களது உணர்வுகளை மதித்து இன்றைய போக்கிற்கேற்ற வகையில் எழுத வேண்டும்'' என்றார்.

எஸ். எஸ். அச்சுதன்பிள்ளை பேசுகையில், ''பெண்கள்சுதந்திரம் இன்று எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை கோப்பாய்சிவம் உணர்வுகளுக்கு மதிப்பளித்து எழுதுபவர். இவரது இன்றைய ஆக்கங்கள் கடந்த கால வரலாறுகளையே சித்தரிக்கின்றன. இவைகள் நாளைய வரலாறும்'' என்றார்.

யாழ், இலக்கிய வட்டத் தலைவர் சசிபாரதி தமது தலைமையுரையில் கூறியதாவது:-

''நாவல் கவிதை போல் ஆவேசத்தினால் எழுதப்படுவதல்ல அதன் பரிமாணங்கள் மாறினாலும் அதற்கோர் ஆரம்பம் நடு, முடிவு இருக்கவேண்டும். நாவலின் விசேஷம் என்னவெனில் அதற்கு மற்ற இலக்கிய வகைகளுக்குஉள்ள வரம்புகளும் நியதிகளும் அவ்வளவாக இல்லை. அது ஆசிரியனது மனோபாவத்திற்கும் கருத்திற்கும் ஏற்பச் சுதந்திரமாகக் கையாளப்படுவதற்கு உரிய சாதனமாக விளங்குகிறது. ஆயினும் இதற்கும் சில உத்திகளும, பொதுவான இலக்கணங்களும் இருக்கவேசெய்கின்றன.

''நாவல் பெரும்பாலும் கற்பனையைத் தழுவியதோர் கலையே என்றாலும், அது வாழ்க்கையுடன் தொடர்பற்றதென்றோ, வெறும் கனவு வகைச் சேர்ந்ததொரு சிருஷ்டியென்றோ கொள்ளலாகாது அது மனித வாழ்க்கை முழுவதையுமே தழுவி நிற்பதால் வாழ்க்கையின் பலதுறைகளையும், பல அச்சங்களையும் தனக்குரிய விஷயங்களாகக் கொண்டியங்குகிறது''.

கிளிநொச்சி ஈழநாடு வாசகர்வட்டத்தலைவர் ஆசிரியர் என். சோதிநாதன் வைபவத்தில் வரவேற்புரை நிகழ்த்தினார். ஈழமுரசு அதிபர் மயில் அமிர்தலிங்கம் முதற்பிரதியை வாங்கினார். சட்டத்தரணி டபிள்யூ.எஸ். செந்தில்நாதன் சிறப்புப் பிரதியைப் பெற்றார்.

கல்வயல் குமாரசாமி வரவேற்புரையும் யாழ்வாணன் நன்றியுரையும் வழங்கினர்.

(கிளி. நி. ஐ.)

# "மனிதர்களை மதிக்காத அரசு அகதிகளையே உற்பத்தி செய்யும்"

[சுன்னாகம்]

''மனித உரிமைகளை மதிக்காத எந்த அரசினாலும் தனது நாட்டில் அகதிகளையே உற்பத்தி செய்யமுடியும் அதனால் வேறெந்த உற்பத்திச் சாதனையையும்செய்யமுடியாது என்பதையே உலக அரசியல் வரலாறு புகட்டுகிறது''

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெயர்ந்துவந்து தங்கியிருக்கும் அகதிகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கும் வைபவத்தில் சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி மாணிக்கவாசகர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அநாதரவாக நிற்கும் அகதிகளுக்கு உதவுவதே உன்னத சேவையாகும் எனவும் அவர் தனது உரையில் வலியுறுத்தினார்.

கந்தரோடை விழிப்பு மன்றமும் விடுதலை இயக்கங்களும் ஒன்றிணைந்து அகதிகளுககு உதவிசெய்ய மேற்கொண்டுள்ள முயற்சிகளை சுன்னாகம் பிரஜைகள்குழு விதந்து பாராட்டியுள்ளது. [ஷ]

## திருநகரில் இளைஞர்கள் கைது

(கிளிநொச்சி)

திருநகர்ப்பகுதிக்கு லொறிகளில் சென்ற ஆயுதம் தாங்கியோர் சில இளைஞர்களை கைது செய்து கொண்டுசென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதனால் திருநகர்ப்பகுதி பதற்றநிலைக்குள்ளாகியது உணவுச்சாலை ஒன்றில் வேலைசெய்யும் ஒருவரும் இச்சம்பவத்தில் கைதாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## 2 மீனவர் கைது

(புலோலி)

பருத்தித்துறைக் கடற்கரையோரமாக கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பிரஜைகள்குழுவிடமும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலையே இவ்விரு மீனவர்களும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை முனை என்னுமிடத்தைச்சேர்ந்த சின்னப்பு டேவிட் மரியநாயகம் (வயது 19), மரியாம்பிள்ளை பத்திமா தேவராசா (வயது-34) என்ற இருமீனவர்களுமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

# அந்த சடலங்களில் ஒன்று மாதகல் வாசியினுடையது

(வவனியா)

பழைய முருகண்டியில் காயங்களுடன் இறந்து கிடந்த 3 பேரில் ஒருவர் மாதகலைச் சேர்ந்த தில்லையம்பலம் நடராசா எனத் தெரிய வந்துள்ளது. ஏனைய இருவரின் விபரங்கள் தெரியவில்லை

குறித்த இடத்தில் காணப்பட்ட இரு லொறிகளில் ஒன்றில் 100 நெல் மூடைகள் எரிக்கப்பட்டிருப்பதாகவும் மற்ற லொறியின் எஞ்சின் பழுதடைந்திருப்பதாகவும் இது புத்தூரைச் சேர்ந்ததென்றும் கூறப்படுகின்றது.

### வாலிபருக்கு துப்பாக்கிச் சூடு

கடந்த வியாழக்கிழமை மாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பி முத்துலிங்கம் என்ற 17 வயது இளைஞர் வவனியா ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அனுராதபுரததிற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மலையகத்தைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் இவர் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானதாகக் கருதப்படுகிறது.

### மீண்டும் வாகனங்கள்

நேற்று முதல் மீண்டும் வவனியாவிலிருந்து வாகனங்கள் யாழ்ப்பாணம்நோக்கிச்செல்ல ஆரம்பித்துள்ளன.

## தொலைபேசி 'வேலை நிறுத்தம்'

(வவனியா)

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி லோகேஸ்வரனின் கச்சேரி அலுவலகத்தின் தொலைபேசி கடந்த சில தினங்களாக இயங்கவில்லை.

இதனால் அரச அதிபருடன் தொடர்புகளை மேற் கொள்ள முடியாது பலர் கஷ்டப்படுகின்றனர் என கச்சேரிவட்டாரங்கள் கவலை தெரிவித்தன

## அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''தாய்த்திருநாட்டின் தகுதி வாய்ந்த புதல்வனுக்கு...'' என்ற தலைப்பில் வசனகவிதை நடையிலான துண்டுபபிரசுரம் ஒன்றுவெளியிடப்பட்டுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி [ஈ. பி. ஆர் எல் எவ்] பி. எல். ஏ. பிரிவைச் சேர்ந்த இ உதயகுமார் [விநோகரன், பலாலி] என்பவர கடந்த 3ம்திகதி வீரமரணமானதையொட்டி இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

# வசிப்பிடங்களை விட்டு மக்கள் வெளியேற்றம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவமுகாமின் முன்பாக தபால் நிலையத்தை அண்டி வசித்து வந்த சகல மக்களும் வசிப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத்தொடந்து கடைகள், வீடுகளில் வசித்து வந்தோர் அகப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு வெளியேறினர்கள்.

இதைத்தொடர்ந்து ஆயுதப் படையினர் அப்பகுதிகளுக்கு செறு முகாமிட்டனர். இதேவேளை தபால் ஊழியர்கள் அச்சத்துடனே கடமைக்கு செல்வதாக தெரிவிக்கப்பட்டது.

# இனஒடுக்கலை எதிர்த்து 16 அமைப்புக்களின் மாநாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு நடாத்தும் பேராளர் மகாநாடு நாளை ஞாயிறு காலை யாழ்ப்பாணம் நாவலர் சந்திக் கருகாமையிலுள்ள கட்டிடத்தில் ஆரம்பமாகும்.

16 வெகுஜன அமைப்புக்கள் இணைந்து உருவாக்கப்பட்ட இணைப்புக்குழு 6அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இம் மகாநாட்டை நடாத்துகின்றது.

சுமார் 600 பிரதிநிதிகள் பங்குகொள்ளும் இம் மகாநாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஐக்கியமான போராட்டத்தை வலியுறுத்தியும் தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கியுள்ள சகல பிரச்னைகளையும் இம்மகாநாட்டின் மூலம் இலங்கை அரசுக்குச் சமர்ப்பித்து மேலும் நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஈடுபடுத்தக்கூடிய விதத்தில் ஒரு பொதுவான போராட்டத்தை இணைந்து நடாத்துவதற்கு இணைப்புக் குழுவிலுள்ள அமைப்புக்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளன.

இணைப்புக்குழுவிலுள்ள 16 அமைப்புக்கள் வருமாறு:

வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு, அன்னையர் முன்னணி, ஈழவர் முன்னணி, கிராமிய உழைப்பாளர் சங்கம், தேசிய மாணவர் மன்றம், விழிப்பு மன்றம், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை, மாதர் மறுமலர்ச்சி பேரணி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தேசிய கலை இலக்கிய பேரவை, கிராமிய தொழிலாளர் சங்கம், கிராமிய முற்போக்கு பெண்கள் அணி, கடற்தொழிலாளர் நலன்புரி ஒன்றியம், சீவல் தொழிலாளர் நலன்புரி ஒன்றியம், உயர் கல்வி மாணவர் ஒன்றியம், உழைக்கும் மக்கள் ஜனநாயக முன்னணி' (க)

## வழமைக்குத் திரும்பியது

(ஒட்டுசுட்டான்)

சொககாவல 18ம் போரில் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தை அடுத்துத்தடைப் பட்டிருந்த யாழ்ப்பாணம்-கொழும்பு போக்குவரத்துச் சேவை நேற்றுக் காலை தொடக்கம் வழமை போல கண்டி வீதி வழியாக நடை பெறத் தொடங்கியுள்ளது.

கண்ணி வெடிச் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு அண்மையில் இருவாசனங்கள் எரிந்துகொண்டிருப்பதைநேற்றும் காணக் கூடியதாக இருந்தது. (மா)

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் பிரிதிவிருஷ்

இராசரத்தினம் பிரிதிவிருஷ் லண்டனில் 2-4-86ல் காலமானார் இவர் கொழும்பு மோட்டோர்ஸ் இராசரத்தினம், ஜெயமணி ஆகியோரின் அன்பு மகனும், பிரிதினி வேம்படி மகளிர் கல்லூரி மாணவியின் அன்பு சகோதரனும், கனகசபேசன் (சத்தி) (அமெரிக்கா) அவர்களின் அன்பு மருமகனுமாவார், இறுதிக்கிரியைகள் இன்று (5-04 86) 4 30 மணியளவில் இலங்கை நேரப்படி லண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

செ. வைத்திலிங்கம் சாந்திகுமார்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(C 1612)

## திருமதி ஜெயலஷ்மி கனகராசா

திருமதி ஜெயலஷ்மி கனகராசா காலமானார். இவர் கொழும்பை பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது காங்கேசன்துறையில் வசிப்பவரும் ஆவர். இவர் காலம் சென்ற கனகராசாவின் அன்பு மனைவியும், இராஜபுஷ்பம், இராஜரட்ணம், செல்வரட்ணம், நவரட்ணம், மனோரஞ்சிதம், அரசரட்ணம், இராஜேஸ்வரி குணரட்ணம் ஆகியோரின்அன்புத்தாயாரும், சிவராம். மனோசரி. இராஜேஸ்வரன், ஆனந்தன், மனோரஞ்சிதம், செந்தில் இராஜேஸ்வரி, ஜெனிட்டா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-4-86 சனிக்கிழமை மாலை நான்கு மணியளவில் காங்கேசன்துறை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திரு. க இராசரத்திளம்
காங்கேசன்துறை.

C 550

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Ee anadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.